DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. NO: 403/2022** Date: 27.03.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 7**

Name : C. வெங்கடேசன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 27.03.2025.

முதல் விசாரணை :–

நான் நாயக்கன்கொட்டாயில் குடியிருந்து நர்சரி நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். 18.08.2021 ம் தேதி காலை சுமார் 8.00 மணியளவில் நானும், ஆறுமுகம் என்பவரும் நர்சரி பார்ப்பதற்காக சென்றிருந்தபோது முத்தம்பட்டி பெருமாள் வீட்டிற்கு முன்பாக இருந்தபோலிசார் தகராறு தொடர்பாக விசாரித்தனர். விசாரித்தற்காக சாட்சி கையெழுத்து கேட்டதால் மேற்படி கையெழுத்தை செய்துக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். சம்பவ இடத்திலிருந்து மரக்கட்டை, இரண்டு இரும்பு கம்பிகள், தோசைகரண்டி ஒன்று, தேங்காய் உரிக்கும் மெசின், இரண்டு இருசக்கர வாகனம், உடைந்த நிலையிலுள்ள பிளாஸ்டிக் ஸ்டுல், செல்போன் ஒன்று, லேப்டாப் ஆகியவற்றை போலிசார் கைப்பற்றினார்கள். அப்போது மேற்படி கையெழுத்தை செய்துகொடுத்தேன். மேற்கண்ட பொருட்களை

எனதுபார்வைக்கு வைத்து கையெழுத்து பெற்றார்கள். வரைபடம் வரைந்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். நானும், ஆறுமுகமும் கையெழுத்து செய்துகொடுத்தோம். (**பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**) போலிசார் வழக்கு குறித்து என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை** –(எதிரிகள்தரப்பில்)

1. எனது இருப்பிடமும், தொழில்செய்யும் இடமும் நாக்கியன்கொட்டாய் என்றால் சரிதான். முத்தம்பட்டி எனது வீட்டிலிருந்து சுமார் 15 கிலோமீட்டர் தள்ளியுள்ளது என்றால் சரிதான். 18.08.2021 ம் தேதி யாருடைய இடத்தை பார்ப்பதற்காக நாங்கள் சென்றோம் என்றால், பொதுவாக இடம் பார்ப்பதற்காக நாங்கள் சென்றோம். கைப்பற்றப்பட்ட பொருட்கள் தார்சாலைக்கு எந்த திசையிலிருந்து எடுக்கப்பட்டது என்றால், திசை தெரியவில்லை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு எதிர்புறமாக இருந்து பொருட்கள் எடுக்கப்பட்டது. அ.சா.2 பெருமாள் எனக்கு தெரிந்தவர் இல்லை, நான் அவரை பார்த்ததில்லை. கைப்பற்றப்பட்ட செல்போனின் தயாரிப்பு நிறுவனம் தெரியாது, செல்போன் சேதாரமாக இருந்ததால் அதில் எழுதப்பட்டிருந்தது தெரியவில்லை.

2. சம்பவம் நடந்த இடத்திலுள்ள தார்சாலை எந்த ஊரிலிருந்து, எந்த ஊருக்கு செல்கிறது என்று எனக்கு தெரியாது. போலிசாரிடம் தகராறு நடந்ததேதி, நேரம் குறித்து நான் எதுவும் கூறவில்லை. அ.சா.6 ஆறுமுகம் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர் கேட்டதற்காக காவல் நிலையத்தில்வைத்து நான் கையெழுத்து செய்துகொடுத்துவிட்டு தற்போது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. NO: 403/2022** Date: 27.03.2025

**Prosecution Witness**

| | |
|---|---|
| Deposition of witness for | : **PW: 8** |
| Name | : L. நரசிம்மன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Age | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 27.03.2025.

முதல் விசாரணை :–

நான் நூலஅள்ளியில் குடியிருந்து, தற்போது தருமபுரி GM தியேட்டர் பின்புறம் ஜெய்அனுமான் இளைப்புமில் என்ற பெயரில் பர்னிச்சர் கடைவைத்து நடத்திவருகிறேன். 2021 ம் வருடம் ஓம் கல்யாணமண்டபம் எதிரில் கடைவைத்திருந்தேன். தேதி, மாதம் நியாபகமில்லை, 2021 ம் வருடம் காலை 11.00 மணியளவில் முத்துப்பட்டியிலிருந்து வந்த ஒருவர் மரஜன்னல் மற்றும் பிளாஸ்டிக்கால் ஆன ஜன்னல் ஆகியவற்றை என்னிடம் கொடுத்தார். அதில் புதிதாக கண்ணாடி மாற்றிதருமாறு கேட்டதால் நான் கண்ணாடியை மாற்றி கொடுத்தேன். அதற்கு செலவாக ரூ.8880 /– க்கு பில் வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் ரசீது நான் வழங்கியதுதான். **மேற்ப ரசீது அ.சா.ஆ. 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலிசார் இதுகுறித்து என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை –** (எதிரிகள்தரப்பில்)

பொருளுக்குரிய நபர் குறிப்பிட்ட வேலையை செய்துகொடுக்குமாறு கேட்டதால் நான் அந்தவேலையை செய்துகொடுத்தேன் என்றால் சரிதான். நான் செய்த வேலை மற்றும் பொருளுக்கு தொகையை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தபோதும் பொருளுக்குரிய நபர் வந்து கேட்டதால் வேலைசெய்துகொடுத்ததாகவும், அதற்கான தொகையை பெற்றுக்கொண்டதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் பொருள் எதையும் காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை –** இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. NO: 403/2022** Date: 27.03.2025

**Prosecution Witness**

| | |
|---|---|
| Deposition of witness for | : **PW: 9** |
| Name | : M. கார்த்திக் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Age | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 27.03.2025.

முதல் விசாரணை :–

நான் கம்பைநல்லூர் அருகில் குடியிருந்து லட்சுமி கமினிகேசன் என்ற பெயரில் மொபைல் சர்வீஸ் சென்டர் தருமபுரி பேருந்து நிலையம் அருகேவைத்து நடத்திவருகிறேன். கடந்த 10.11.2021 ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் மதிகொண்பாளைய காவல் நிலைய போலிசார் எனது கடைக்குவந்து MI Note 7 pro என்ற செல்போனை என்னிடம் காண்பித்து அதன் மதிப்பை கேட்டார். செல்போன் உடைந்த நிலையில் இருந்தது. மேற்படி செல்போனின் மதிப்பு ரூ.12500/– இருக்குமென சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சான்று நான் வழங்கியதுதான். **10.11.2021 ம் தேதியிட்ட மேற்படி சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை** – (எதிரிகள்தரப்பில்)

தருமபுரி அரசு பேருந்து நிலையத்திற்கு பின்புறமாக நகராட்சிக்கு சொந்தமான கடைகள் உள்ளது என்றால் சரிதான். நான் MI நிறுவனத்தின் அங்கீகாரம்பெற்ற சர்வீஸ் டீலர் இல்லை என்றால் சரிதான். எனது GST எண் தற்போது எனக்கு நியாபகமில்லை, ஆனால் உள்ளது. செல்போனில் பதிவேற்றம் எதுவும் செய்யும் தொழில் நான் செய்துவரவில்லை. நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், செல்போனில் பதிவேற்றம் செய்துதருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் அவ்வாறு பதிவேற்றம் செய்துதருவதால் போலிசாரின் தயவு எனக்கு தேவை என்றாலும், அதனால் போலிசார் கேட்டதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சான்றழித்த செல்போனின் மாடல் என்னவென்று எனக்கு தெரியாது. ஒவ்வொரு வருடத்திற்கு உண்டான செல்போன் மாடல்களை பொறுத்து அதன் செலவுத்தொகை மாறுபடும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.